10/=

பக்கங்கள் 06

# எதிரொலி
Ethiroli

குரல் 01 அதிர்வு 83 வெள்ளிக்கிழமை ஒகஸ்ட் 04 2017 ethirolimedia@gmail.com 021 300 48 48

## குழப்பத்தின் பின்னணியில் வெளிநாட்டுத் தூதரகம்!



அம்பாந்தோட்டைத் துறைமுகம் தொடர்பிலான விவாதத்தைக் குழப்புவதற்கு வெளிநாட்டுத் தூதரகமொன்று தலையிட்டிருப்பதாகச் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் இவ்விடயம் குறித்து ஆராய்ந்து அறிக்கையிடுமாறு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, வெளிவிவகார அமைச்சுக்குப் பணித்துள்ளார்.

கடந்தவாரம் அம்பாந்தோட்டைத் துறைமுகம் தொடர்பிலான விவாதம் நாடாளுமன்றில் நடைபெற்றது.

அதன்போது ஒன்றிணைந்த எதிர்க் கட்சி கூச்சல் குழப்பம் விளைவித்திருந்தது. இதனால் விவாதம் வாக்கெடுப்புக்கு விட முடியாமல் சபை நடவடிக்கைகள் ஒத்திவைக் கப்பட்டன. இந்நிலையில் தூதரகம் ஒன்றினால் ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் பிரபல்யமானவர்களைக் கொண்டு, இந்த விவாதம் குழப்பியடிக்கப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பில் அமைச்சரவை இணைப்பேச்சாளர்களில் ஒருவரான அமைச்சர் தயாசிறி ஜயசேகரவும் கருத்து வெளியிட்டிருந்தார். இவை யாவற்றையும் கவனத்தில் எடுத்தே அறிக்கையிடுமாறு, பிரதமர் பணித்துள்ளதாக அறியமுடிகிறது.(எ)



# பணியைப் புறக்கணித்து போராடுங்கள்

### அமைச்சரின் ஆலோசனை இது

” உரிய வசதிகளும், ஆளணிகளும் கிடைக்கவில்லையெனில் அரசுக்கு எதிராகப் பணிப்புறக்கணிப்புச் செய்யுங்கள்” என்று வேலணைப் பிரதேச சுகாதாரத் துறையினருக்கு ஆலோசனை தெரிவித்துள்ளார் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன்.

வேலணைப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இணைத்தலைவர்களில் ஒருவராக நேற்றுக் கலந்து கொண்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வேலணை, நெடுந்தீவு, புங்குடுதீவு போன்ற தீவுப்பகுதிகளில் உள்ள வைத்தியசாலைகளில் ஆளணிப் பற்றாக்குறை, மருந்துப் பற்றாக்குறை, வசதியீனங்கள் என்பன தொடர்வதாக மருத்துவமனைப் பொறுப்பதிகாரிகள் தெரிவித்தனர். இது குறித்துப் பதிலளித்த இராஜாங்க அமைச்சர்,

“இப்போது நாட்டில் ஜனாதிபதியும், பிரதமரும் தான் மாறியுள்ளார்களே தவிர, மற்றும்படி முன்னைய ஆட்சி போலவே எல்லாம் நடக்கிறது.

06



### கிளிநொச்சியில் இன்று அதிகாலை

# மின்னல் வேக பஸ்: மின்கம்பம் தகர்ப்பு

**ஆறு பேர் படுகாயம் ரூ. 25 இலட்சம் நட்டம்**

கிளிநொச்சியில் இன்று வெள்ளிக்கிழமை அதிகாலை அதி சொகுசு பேருந்து விபத்துக்குள்ளானது. இதில் ஆறு பேர் படுகாயமடைந்தனர். விபத்தினால் அதிஉயர் மின்மாற்றி மற்றும் மின்கம்பங்கள் முறிவடைந்ததில் மின்சார சபைக்கு சுமார் 25 இலட்சம் வரை சேதம் ஏற்பட்டுள்ளது.

இன்று அதிகாலை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி குறித்த அதி சொகுசுப் பேருந்து மின்னல் வேகத்தில் பயணித்தது. பேருந்து கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கருகில் ஏ9 வீதியில் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானது. இதன் போது படுகாயமடைந்த ஆறுபேரும் உடனடியாக மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். குறித்த பேருந்து அதி வேகமாகப் பயணித்ததாகவும், ஏ9 வீதியின் குறுக்காக பிறிதொரு வாகனத்தை அவதானித்த போது பேருந்துச் சாரதி பேருந்தை சடுதியாகத் திருப்பிய போதே குறித்த விபத்து ஏற்பட்டதாகவும் சம்பவத்தை நேரில் கண்டவர்கள்

06

## 6 பொலிஸ் குழுக்கள் யாழில் களமிறங்கின



யாழ்.கொக்குவில் பகுதியில் வைத்து பொலிஸார் மீது மேற்கொள்ளப்பட்ட வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர்களைக் கைது செய்வதற்காக 6 விசேட பொலிஸ் குழுக்கள் களமிறக்கப்பட்டுள்ளன.

வடமாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபரின் நேரடி கட்டுப்பாட்டில் இந்த 6 பொலிஸ் குழுக்களும் சிறப்பு விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாகப் பொலிஸார் கூறியுள்ளனர்.

சந்தேக நபர்களைப் பொலிஸார் விரைவில் கைது செய்துவிடுவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(அ)

## மிரட்டும் ஆவி; பயத்தில் ஷிராந்தி!



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் மனைவி ஷிரந்தி ராஜபக்ச, ஹங்குரகெத்த விஷ்ணு கோவிலுக்கு இன்று காலை சென்று விசேட பூஜை வழிபாட்டில் ஈடுபட்டார். படுகொலை செய்யப்பட்ட ரகர் வீரர் வசீம் தாஜூதீன் ஆவியே , மகிந்த குடும்பத்துக்கு ஏற்பட்ட பிரச்சினைகளுக்கு காரணம் எனவும், அதனால் அந்த ஆவியைச் சாந்தி செய்ய விஷ்ணு ஆலயத்தில் பரிகார பூஜை செய்ய வேண்டுமெனவும், சோதிடர் ஒருவர் தெரிவித்தமையாலே, இந்த பூஜையில் ஷிராந்தி கலந்துகொண்டார் எனக் கூறப்படு

06



வடக்கு மாகாணத்தில் நியமனம் செய்யப்படவுள்ள 25 தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்குக்கான நியமனக் கடிதங்கள், இன்று ஆளுநரால் வட மாகாண பிரதம செயலாளர் பத்திநாதனிடம் கையளிக்கப்பட்டுள்ளன. (உ–11)

## பொலிஸ் அதிகாரிகள் அதிரடி இடமாற்றம்

உதவி பொலிஸ் அத்தியட்சகர்கள், பிரதான பொலிஸ் பரிசோதகர்கள் மற்றும் பொலிஸ் பரிசோதகர்கள் உள்ளடங்கலாக, 58 பேர் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில், அதிரடியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக, பொலிஸ் தலைமையகம் இன்று அறிவித்துள்ளது.

பொலிஸ்மா அதிபரின் பரிந்துரைக்கு அமைவாக, தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அனுமதியுடன் மேற்படி 58 பேரும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டவர்களில் உதவி

06

## ரவியைப் பதவி நீங்குங்கள்

### அமைச்சர்கள் எச்சரிக்கை



வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்கவை அமைச்சுப் பதவியிலிருந்து நீக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள் சிலர் இணைந்து கூட்டாக ஜனாதிபதியிடம் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

ரவி கருணாநாயக்கவின் நடவடிக்கைகள் ஒட்டுமொத்த அமைச்சரவையையும் பாதிப்பதாகத் தெரிவித்துள்ள அவர்கள், ரவி கருணாநாயக்க தொடர்பில் ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கத் தவறினால் நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு ஆதரவளிக்க நேரிடும் எனவும் எச்சரித்துள்ளனர். (உ)

# இசைப்பேழை வெளியீடு!




வேலணை வடக்கு இலந்தைவனப்பதி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தின் மீது பாடல்கள் பாடப்பட்டுள்ளன. இதன் இசைப் பேழை வெளியீடு நாளை காலை 08.30 மணிக்கு வேலணை இலந்தைவனம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடல்களை வேலணையூர் சாமி புத்தன் எழுதியுள்ளார். இசைவாரிதி வர்ஷன் இசையமைப்பில், தென்னிந்தியப் பாடகர்களான டாக்டர். நாராயணன், அனந்து, செந்தில்தாஸ், முகேஷ் வர்ஷன் மற்றும் நம்நாட்டு பாடகி லம்பிகாத்வனி ஆகியோர் பாடல்களைப் பாடியுள்ளனர். (உ)

# பொலிஸ் நிலையத்தில் கத்திக் குத்து

இங்கிரிய பொலிஸ் நிலையத்துக்குள் கத்திக் குத்துச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது. குடும்பப் பிணக்கு காரணமாக கணவன், மனைவியைக் கத்தியால் குத்தியுள்ளார்.

கணவனுக்கு எதிராக முறைப்பாடு செய்த மனைவியையே, பொலிஸ் நிலையத்துக்குள்ளேயே வைத்து கணவன் கத்தியால் குத்தியுள்ளார்.

நீண்ட காலமாக இந்தத் தம்பதியினருக்கு இடையில் முரண்பாடு நீடித்து வந்தது என தெரிவிக்கப்படுகிறது. இதன் காரணமாக குறித்த பெண் தனது தந்தையின் வீட்டுக்கு சென்றுள்ளார். இதனால் குறித்த பெண்ணின் தந்தையை, பெண்ணின் கணவர் கத்தியால் குத்தியுள்ளார். இது குறித்து முறைப்பாடு செய்யவே குறித்த பெண் பொலிஸ் நிலையத்துக்கு சென்றுள்ளார். அவரைப் பின்தொடர்ந்து சென்ற கணவர் பொலிஸ் நிலையத்தில் வைத்தே கத்தியால் குத்தி பெண்ணைக் காயப்படுத்தியுள்ளார். (உ)

# 15 இலங்கையர்களை நாடு கடத்தியது ஆஸி.

ஆஸ்திரேலியாவிலிருந்து 15 இலங்கையர்கள் நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

ஆஸ்திரேலியாவுக்குச் சொந்தமான எஸ்.என்.டி.1 ரக ஸ்கை ட்ரேடஸ் என்ற விசேட விமானத்தில் அனுப்பப்பட்ட இவர்கள், இன்று காலை கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

சட்டவிரோதமாக ஆஸ்திரேலியாவுக்கு நுழைந்திருந்த சந்தர்ப்பத்தில், அந்த நாட்டு பாதுகாப்பு பிரிவினால் இவர்கள் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட அனைவரும் ஆண்களாவர். இவர்கள் அங்குள்ள தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்தின் குடிவரவு குடியகல்வு அதிகாரிகளிடம் இவர்கள் ஒப்படைக்கப்பட்ட பின்னர் விமான நிலையக் குற்ற விசாரணைத் திணைக்கள அதிகாரிகளால் வாக்கு மூலம் ஒன்று பெற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் இவர்கள் விடுவிக்கப்படவுள்ளனர். (உ)

## சரியான சாட்சியங்கள் இல்லை

# பொலிஸாருக்கு நீதிபதி எச்சரிக்கை

சரியான சாட்சியங்கள் இல்லாமல் வெறும் சந்தேகத்தின்பேரில் ஐந்து பேரைக் கைது செய்து அலைக்கழித்த இரு பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு பாணந்துறை பிரதம நீதிவான் சமிந்த லியனகே கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இவர்கள் ஐவரும் பள்ளிவாசலொன்றின் மீதும், கடையொன்றின் மீதும் பெற்றோல் குண்டுகளை வீசினர் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

எனினும், வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது அவர்களுக்கு எதிரான சாட்சியங்கள் எதுவும் பொலிஸாரால் முன்வைக்கப்படவில்லை.

இவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டை நிரூபிக்க போதிய ஆதாரங்கள் இல்லை யென சட்டமா அதிபரும் நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பித்திருந்தார்.

அதனடிப்படையில் இவர்களைக் கைது செய்து வழக்குத் தொடர்ந்திருந்த கொழும்பு குற்ற விசாரணைப் பிரிவின் பொலிஸ் பரிசோதகரான நெவில் டீ சில்வாவுக்கும், பாணந்துறை தெற்கு தலைமையகப் பொலிஸ் பரிசோதகரான துஷார டீ சில்வாவுக்கும் பகிரங்க நீதிமன்றத்தில் கடும் எச்சரிக்கை விடுக்கப்பட்டது. (உ)

# வரிச் சட்டமூல வரைவுக்கு சிக்கல்



திருத்தம்செய்யப்பட்ட புதிய தேசிய வருமான வரிச் சட்டமூல வரைவின் சில பந்திகள் அரசமைப்புச் சட்டத்துக்கு ஏதுவானதாக இல்லை என உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளதாக சபாநாயகர் இன்று நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இதனால், இந்தச் சட்டமூலத்தை நிறைவேற்ற வேண்டுமாயின் விசேட பெரும்பான்மை மூலம் நிறைவேற்ற வேண்டும் எனவும், அப்படியில்லை எனில் பந்திகளை திருத்த வேண்டும் எனவும் உயர் நீதிமன்றம் பரிந்துரைத்துள்ளதாக சபாநாயகர் கரு ஜயசூரிய குறிப்பிட்டுள்ளார். (உ)

# வீட்டுக்கு அனுப்பிய அதிபரை பணியிலமர்த்திய ஆளுநர்!

ஊழல் குற்றச்சாட்டின் அடிப்படையில் கட்டாய ஓய்வில் வீட்டுக்கு அனுப்பப்பட்ட அதிபரை, வடக்கு ஆளுநர் மீண்டும் பணியில் அமர்த்தியதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. குறித்த அதிபர் வவுனியா மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் பணியாற்றியபோது ஊழல் மற்றும் அதிகார முறைகேட்டில் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. இதனைக் கண்டித்துள்ள வவுனியா மாவட்ட சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"இந்த அதிபர் மீது 25 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன. அவை தொடர்பில் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் விசாரணைக் குழு விசாரணை நடத்தியது. 23 குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டு கட்டாய ஓய்வூதியத்தில் அவர் வீட்டுக்கு அனுப்பப்பட்டார். ஆனால், அவரை வடக்கு மாகாண ஆளுநர், வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் தீர்ப்பைப் புறக்கணித்து மீண்டும் பாடசாலையில் உப அதிபர் பணியில் அமர்த்தப்பட்டிருக்கிறார். இச் செயற்பாடானது மாகாண அதிகாரங்களில் மத்திய அரசு தலையிடுகின்ற தன்மையினை வெளிப்படுத்துவதோடு குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவரை ஆளுநர் காப்பாற்ற முற்பட்ட செயலையுமே வெளிப்படுத்தியிருக்கிறது"- என்றுள்ளது.(எ-212)

# 70.77 மில்லியன் செலவில் கல்வி அபிவிருத்தி வேலைத்திட்டம்

கிளிநொச்சி, கண்டாவளைப் பிரதேசத்தில் கல்வி அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் இவ்வாண்டு ஐம்பது வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இவ் வேலைத்திட்டங்கள் 70.77 மில்லியன் ரூபா செலவில் முன்னெடுக்கப்பட்டு வருவதாக கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலகம் தெரிவித்துள்ளது.

இது குறித்து கிளிநொச்சி, கண்டாவளை பிரதேச செயலகம் விடுத்துள்ள அறிக்கையில்,

"கிளிநொச்சி கல்வி வலயத்தின் கண்டாவளைக் கல்விக் கோட்டத்தில் உள்ள 24 பாடசாலைகளில் சுமார் 5,386 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். இப்பாடசாலைகளில் 348 வரையான ஆசிரியர்கள் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில் குறித்த பாடசாலைகள் பல்வேறு தேவைப்பாடுகளுடன் காணப்படுகின்றன.

குறிப்பாக குடிநீர் வசதி, மலசல கூட வசதி, வகுப்பறைக் கட்டடத்தொகுதிகள் இன்மை போன்ற பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் பாடசாலைகள் இயங்கி வந்தன. எனினும் தற்போது பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (உ)

# அரசியல் கைதிகள் படுகொலை நினைவு கூரலுக்கு ஏற்பாடு

இலங்கைச் சிறைச்சாலைகளில் படுகொலை செய்யப்பட்ட அரசியல் கைதிகளை நினைவுகூரும் வகையில் வடக்கில் எதிர்வரும் 8ஆம் திகதி நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இதற்குரிய ஏற்பாடுகளை அரசியல் கைதிகளை விடுதலைசெய்வதற்கான தேசிய அமைப்பு ஏற்பாடு செய்துள்ளது. இது குறித்து அவ்வமைப்பின் ஏற்பாட்டாளர் அருட்தந்தை மா.சக்திவேல் விடுத்துள்ள அறிக்கையில்,

"அரசியல் கைதிகளான நிமலரூபன், டில்ருக்ஷன் ஆகிய இருவரும் அநுராதபுரம் சிறைச்சாலையில் தாக்குதலுக்குள்ளாக்கப்பட்டு, 2012ஆம் ஆண்டு கொல்லப்பட்டனர். இவர்களுடைய 5ஆம் ஆண்டு நினைவேந்தலும், இதுவரை கொல்லப்பட்ட அனைத்து அரசியல் கைதிகளினதும் நினைவேந்தலும் வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் அனுஷ்டிப்பதற்கு அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது.

அரசியல் கைதிகள் இல்லையென அரசு கூறுவதோடு பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டு நீண்ட காலமாக வழக்குகள் நடந்துகொண்டிருக்கின்ற நிலையில், நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஸ இவர்களை விடுதலைசெய்ய மாட்டோம் என நீதிமன்றுக்கு சவால் விட்டுள்ளார். இதனைக் கண்டித்தும், அரசியல் தீர்மானமெடுத்து அனைத்து அரசியல் கைதிகளையும் அரசு விடுதலைசெய்ய வேண்டும் என்று வலியுறுத்தியும் கவனயீர்ப்புப் போராட்டமும் நடத்தப்படவுள்ளது. - என்றுள்ளது. (உ)

மாதாந்தம் ஒரு இலட்சம் வரை சம்பாதிக்கலாம்

விளம்பரத் துறையில் அனுபவம் / ஆர்வம் உள்ளவரா நீங்கள்? அப்படியாயின் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

முழு நேரமாகவோ / பகுதி நேரமாகவோ உங்கள் வசதிக்கேற்ப பணி புரியலாம்

தொடர்புகளுக்கு : 021 300 4848

# சமுர்த்திப் பயனாளிகள் ஆர்ப்பாட்டம்



சமுர்த்திப் பயனாளிகளின் மீளாய்வு அண்மையில் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இதன்போது பலரது பெயர்கள் நீக்கப்பட்டன. இதேவேளை அண்மைக்காலமாக உரிய காலத்தில் கொடுப்பனவுகள் வழங்கப்படாது இழுத்தடிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுவந்துள்ளன.

இவற்றைக் கண்டித்து நாடு முழுவதிலும் சமுர்த்திப் பயனாளிகள் போராட்டங்களில் ஈடுபட்டுவருகின்றனர். இந்நிலையில் அம்பகமுவ பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதி மக்கள், சுமார் 7000 பேர் இன்று அம்பகமுவ பிரதேச செயலகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (உ)



# வடகொரியாவை விட்டு! உடனே வெளியேறுங்கள்

"வடகொரியாவை விட்டு அமெரிக்கக் குடிமக்கள் அனைவரும் வரும் செப்ரெம்பர் முதலாம் திகதிக்குள் வெளியேறுங்கள்"என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.
வடகொரியா தொடர்ந்தும், கண்டம் விட்டு, கண்டம் பாயும் ஏவுகணைச் சோதனைகளை மேற்கொண்டு வருகிறது. சமீபத்தில் மேற்கொண்ட சோதனை உலகநாடுகளைப் பீதியில் ஆழ்த்தியுள்ளது.
அதைத் தொடர்ந்து வட கொரிய அதிபர் கிம் ஜங் உன் அமெரிக்காவின் எந்த பகுதியையும் தங்களால் தாக்க முடியும் என்று கூறியிருந்தார். இதற்கு அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் கடும் கண்டனம் தெரிவித்திருந்தார்.
இந்த நிலையில் அமெரிக்க அரசு, வரும் செப்ரெம்பர் 1 ஆம்திகதி முதல்வட கொரியாவுக்குச் செல்லவோ, வட கொரியா வழியாகப் பயணம் செய்யவோ அமெரிக்க குடிமக்களுக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது என்றும், இதையும் மீறி யாரேனும் அமெரிக்கக் குடிமகன் வட கொரியாவுக்குப் பயணம் செய்ய விரும்பினால், சிறப்பு அனுமதி பெற்றுத்தான் செல்ல வேண்டும் என்றும் தெரிவித்துள்ளது.
அதிலும் இந்தச் சிறப்பு அனுமதி பத்திரிகையாளர்கள் போன்றவர்களுக்கு மட்டுமே அளிக்கப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.(இ)

**2100 ஆம் ஆண்டு**

# இந்தியாவில் மனிதர் உயிர்வாழ முடியாது



கடும் வெப்பம் காரணமாக 2100 ஆம் ஆண்டளவில் இந்தியாவில் உயிர்வாழ்வது கடினம் என ஆய்வொன்றில் தெரியவந்துள்ளது.
புவி வெப்பமயமாதல், பருவநிலை மாற்றங்கள் போன்ற காரணங்களால் இந்தியா உள்ளிட்ட தென்னாசிய நாடுகள் சமீபத்திய ஆண்டுகளில் பெரும் வெப்ப அலைகளால் பாதிக்கப்பட்டு வருகின்றன.
2015 ஆம் ஆண்டு இந்தியா-பாகிஸ்தான் நாடுகளில் ஏற்பட்ட பயங்கர வெப்ப அலைகளால் 3,500 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.
இந்த நிலை தொடர்ந்தால் 2100 ஆம் ஆண்டில் இந்தியாவில் உயிர்வாழ்வது கடினம் என ஆய்வில் தெரியவந்துள்ளதாக 'அறிவியல் முன்னேற்றங்கள்' என்ற ஆய்வு இதழில் கூறப்பட்டுள்ளது.
பூமியில் நிலவும் வெப்ப நிலையை ஈரப்பதம் சேர்ந்தது மற்றும் ஈரப்பதம் சேராதது என விஞ்ஞானிகள் இருவகையாகப் பிரிக்கின்றனர். இதில் காற்றில் இருக்கும் ஈரப்பதத்தை ஆவியாக்கிய பிறகு கிடைக்கும் குறைந்த பட்ச வெப்பநிலை, ஈரப்பதம் சேர்ந்த வெப்ப நிலையாகக் கொள்ளப்படுகின்றது.
இந்த வெப்பநிலை 2100 ஆம் ஆண்டளவில் இந்தியாவில் 35 டிகிரி செல்சியசாக அதிகரிக்கும் என விஞ்ஞானிகள் கூறியுள்ளனர். அப்போது அதிக வெப்பம் மற்றும் காற்றின் ஈரப்பதத்தால் மனித உடல் தகுதி இழந்து நோய்களும், மரண எண்ணிக்கையும், அறிதல் திறன் குறைபாடுகளும் அதிகரிக்கும்.
நல்ல உடல்நலத்துடன் இருப்பவர்கள் கூட மரணத்துக்கு தப்ப முடியாது என விஞ்ஞானிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (இ)

# கவனம்! கவர்ச்சி உளவாளிகள்!!

சமூக வலைத்தளங்கள் மூலம் இந்திய ராணுவ வீரர்களிடம் கவர்ச்சியாகப் பேசி, இரகசியங்களைச் சேகரிக்கும் முயற்சியில் கவர்ச்சிப் பெண்களை பாகிஸ்தானும், சீனாவும் ஈடுபடுத்துவதாக இந்தியப் புலனாய்வு அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.
பாகிஸ்தானில் உள்ள கராச்சியில் ஐ. எஸ் அமைப்பைச் சேர்ந்த சஜ்ஜித், அபித் ஆகிய இருவரும் இந்திய இராணுவ அதிகாரிகளிடம் கவர்ச்சியாகப் பேசுவதற்காக பெண்களைப் பணிக்கு அமர்த்தி உள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.
அழகான பாகிஸ்தான்பெண்களையும், சீனப்பெண்களையும் பயன்படுத்தி, சமூகவலைத்தளம் மூலம் இந்திய இராணுவ அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டு, அவர்களிடம் இருந்து இராணுவ இரகசியங்களைப் பெற அந்தக் கவர்ச்சிப் பெண் உளவாளிகள் முயல்வதாகக் கூறப்படுகின்றது.எனவே இந்தக் கவர்ச்சி உளவாளிகள் குறித்து அவதானமாக இருக்குமாறு இந்திய இராணுவ அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (இ)

# 30 வருடத்தின் பின் மீட்கப்பட்ட சடலம்



30 வருடத்துக்கு முன்னர் காணாமல் போன, ஜேர்மனியைச் சேர்ந்த நபர் ஒருவர், பனிப்பாறை மலையில் சடலமாகத் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.
சுவிற்சர்லாந்தில் மிகப்பெரிய பனிப்பாறை மலை ஒன்று அமைந்துள்ளது. கடந்த வாரம் இருவர் அங்கே சென்றிருந்த போது இறந்த ஒருவரின் கையையும், காலணிகளையும் கண்டுபிடித்துள்ளனர்.
அப்போது வானிலை மோசமாக இருந்ததால் அடுத்த நாள் குறித்த நபரின் மீதி உடற்பாகங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.
பொலிஸார் இதுகுறித்துக் கூறுகையில், உயிரிழந்த நபர் 1943 இல் பிறந்தவர் . கடந்த 1987 ஒகஸ்ட் மாதத்தில் தனது சொந்த நாடான ஜேர்மனியில் காணாமல் போயுள்ளார் - என்றனர்.
இதேபோல 1942 இல் இறந்த தம்பதிகளின் உடல் கடந்த மாதம் பனிப்பாறையில் கண்டுபிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(இ)

# உலகின் உயரமான கட்டடத்தில் தீ!



டுபாயில் உள்ள , 1,105 அடி உயரம் கொண்ட, உலகில் மிகவும் உயரமான கட்டடங்களில் ஒன்றான டோர்ச் ரவரில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டுள்ளது.
நேற்று உள்ளூர் நேரப்படி காலை ஒரு மணி அளவில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.
கட்டடத்தின் 9 ஆவது மாடியில் இருந்து தீப்பற்றி எரிந்து கொண்டு அப்படியே அடுத்தடுத்து பரவி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
திடீரென்று ஏற்பட்ட இந்தத் தீ விபத்தை அறிந்து, தீயணைப்பு படையினர் அங்கு விரைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நடவடிக்கை எடுத்துள்ளனர்.
கட்டடத்தில் யாரேனும் சிக்கியுள்ளார்களா என்பது குறித்து எந்த ஒரு தகவலும் இதுவரை தெரியவரவில்லை. (இ)

# இருளில் ஒளிரும் நாணயம்




இருளில் ஒளிரக்கூடிய நாணயத்தினை உலகிலேயே முதன்முறையாகக் கனடா வெளியிட்டுள்ளது.
கனடாவின் 150ஆவது பிறந்தநாளை முன்னிட்டு கனேடிய நாணய வாரியத்தினால் இந்த நாணயம் மக்கள் பாவனைக்காக வெளியிடப்பட்டுள்ளது.
இரண்டு டொலர் பெறுமதியான மூன்று மில்லியன் உலோக நாணயக் குற்றிகள் இவ்வாறு வெளியிடப்பட்டுள்ளன.
பகல் வேளைகளில் சாதாரண நாணயக் குற்றிகளைப் போல் தோற்றமளிக்கும் இவை, இரவு வேளைகளில் ஒளிரும் சிறப்புத் தன்மையைக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

# ரஷ்யா மீது வணிகப்போர்!



அமெரிக்காவின் பொருளாதாரத் தடை ரஷ்யா மீதான வர்த்தகப் போருக்குச் சமமானது என ரஷ்யப் பிரதமர் திமித்ரி மெத்வதேவ் கூறியுள்ளார்.
இதுகுறித்துப் பேசிய ரஷ்ய பிரதமர் திமித்ரி மெத்வதேவ், "ரஷ்யா மீது அமெரிக்கா விதித்திருக்கும் பொருளாதாரத் தடையானது முழு அளவிலான வர்த்தகப் போருக்குச் சமமானது.
அமெரிக்க ஜனாபதிபதி டொனால்ட் டிரம்ப் மிகவும் பலவீனமானவராக இருப்பதாக நினைக்கிறோம். இந்தத் தடையால் அமெரிக்கா மற்றும் ரஷ்யா நாட்டு உறவில் புதிய விரிசல் ஏற்பட்டுள்ளது.
இந்தப் பொருளாதாரத் தடையால் வரும் சாதக, பாதக செயற்பாடுகள் இனிவரும் காலங்களில்தான் தெரியும். இது ரஷ்யாவின் மீதான ஒரு வணிகப் போர்" என்றார். (இ)

# சாவின் விளிம்பில் 10 லட்சம் குழந்தைகள்



யேமனில் பத்து லட்சம் குழந்தைகள் பட்டினி மற்றும் கொலரா நோயால் இறக்க போகும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.
சேவ் த சில்ரன் என்ற தன்னார்வ அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில், கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாட்டால் யேமனில் உள்ள குழந்தைகளின் நோய் எதிர்ப்புச் சக்தி பலவீனமடைந்திருப்பதாகக் கூறப்பட்டுள்ளது.
இதன் காரணமாக ஒரு மில்லியனுக்கும் அதிகமான குழந்தைகளுக்கு கொலரா நோய் வந்தால் அவர்கள் உயிரிழப்பதற்கான வாய்ப்பு மூன்று மடங்கு அதிகமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அத்தோடு ஐந்து வயதுக்கும் குறைவான இரண்டு லட்சம் யேமன் குழந்தைகள் பட்டினியால் இறக்கும் ஆபத்து இருப்பதாகவும் சேவ் த சில்ரன் தெரிவித்துள்ளது.
இரண்டு வருடமாக நடந்த உள்நாட்டுப் போரின் காரணமாக யேமன் பஞ்சத்தின் விளிம்புக்குத் தள்ளப்பட்டிருப்பதுடன், நாட்டின் சுகாதார அமைப்பு முற்றிலும் முடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.(இ)



# ஐயனார், சென். மைக்கல் வெற்றி

திக்கம் மத்திய சனசமூக நிலையத்தின் வைர விழாவை முன்னிட்டு நடத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டத் தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டங்களில் ஐயனார் மற்றும் சென். மைக்கல் கழகங்கள் வெற்றி பெற்றன.

நேற்று இரவு 7 மணிக்கு ஆரம்பமாகிய முதலாவது போட்டியில் நக்கீரன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து உரும்பிராய் சென். மைக்கல் விளையாட்டுக்கழகம் மோதியது.

இந்த ஆட்டத்தின் முதல் பாதியில் கோல் எதுவும் விழவில்லை. எனினும் பிற்பாதியில் வெகுண்டெழுந்த சென். மைக்கல் விளையாட்டுக்கழகம் அதிரடியாக 3 கோல்களைப் போட்டு, 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றியைத் தனதாக்கிக்கொண்டது.

பின்னர் 8 மணிக்கு ஆரம்பமாகிய ஆட்டத்தில் கரவெட்டி ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து துறையூர் ஐயனார் விளையாட்டுக்கழகம் மோதியது.

இந்த ஆட்டத்தின் முதலிரு கோல்களையும் ஐயனார் போட்டது. ஆட்டத்தின் கடைசிக் கட்டத்தில் ஐக்கிய விளையாட்டுக்கழகம் கோல் ஒன்றைப் போட்டு ஆட்டத்தைப் பரபரப்பாக்கியது.

எனினும், அந்தக் கோலே ஆட்டத்தின் கடைசிக் கோலாகவும் அமைய, ஐயனார் விளையாட்டுக்கழகம் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றியைத் தனதாக்கிக்கொண்டது. (ஐ)

# இன்றைய ஆட்டங்கள்

திக்கம் மத்திய சன சமூக நிலையத்தின் வைர விழாவை முன்னிட்டு நடத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டத் தொடரில் இன்று இரவு இரு ஆட்டங்கள் நடைபெறவுள்ளன.

இரவு 7 மணிக்கு ஆரம்பமாகும் முதலாவது போட்டியில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பொம்மர்ஸ் விளையாட்டுக்கழகம் மோதும்.

பின்னர் 8 மணிக்கு ஆரம்பமாகும் ஆட்டத்தில் ஸ்மாட் போய்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அராலி ஏஎல் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

* * * * * * * *

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் 62ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடத்தப்பட்டுவரும் கரப்பந்தாட்டத் தொடரில் இன்று இரவு 'பி' பிரிவு அணிகளுக்கிடையிலான மூன்று ஆட்டங்கள் நடைபெறவுள்ளன.

இரவு 6.30 மணிக்கு ஆரம்பமாகும் முதலாவது ஆட்டத்தில் நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நாயன் மார்கட்டு பாரதி விளையாட்டுக் கழகம் மோதும்.

பின்னர் 7 மணிக்கு ஆரம்பமாகும் இரண்டாவது ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து அச்சுவேலி கலைமகள் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

தொடர்ந்து இரவு 7.45 மணிக்கு ஆரம்பிக்கும் மூன்றாவது போட்டியில் கைதடி ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சண்டிலிப்பாய் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (ஐ)


# அடுத்த சுற்றில் வாலிபர், பாரதி

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் 62ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடத்தப்பட்டுவரும் கரப்பந்தாட்டத் தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டங்களில் அச்சுவேலி தோப்பு வாலிபர் விளையாட்டுக் கழகம் மற்றும் நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக் கழகம் என்பன வெற்றிபெற்றன.

நேற்று இரவு நடைபெற்ற ஆட்டமொன்றில் அச்சுவேலி தோப்பு வாலிபர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து புத்தூர் சென்றல் ஸ்ரார் விளையாட்டுக் கழகம் மோதியது.

இதில் முதல் சுற்றை சென்றல் ஸ்ரார் 25:23 என்ற புள்ளிக் கணக்கில் தன் வசப்படுத்த, அடுத்த இரு சுற்றுக்களையும் 25:19, 27:25 என்ற புள்ளிக் கணக்கில் தன்வசப்படுத்திய வாலிபர் விளையாட்டுக் கழகம், 2:1 என்ற சுற்றுக் கணக்கில் வெற்றியையும் தனதாக்கிக்கொண்டது.

இதேவேளை, நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து விளையாட வேண்டிய கெருடாவில் விவேகானந்தா விளையாட்டுக் கழகம் வருகை தராமையால் பாரதிக்கு வெற்றி வழங்கப்பட்டது. (ஐ)



# கடைசி ஓட்டம்

லண்டனில் இன்று ஆரம்பிக்கும் உலக தடகளப் போட்டிகளுடன் 'மின்னல் மனிதன்' என வர்ணிக்கப்படும் குறுந்தூர ஓட்ட வீரரான உசைன் போல்ட் விடைபெறவுள்ளார்.

16ஆவது உலகத் தடகள சம்பியன்ஷிப் தொடர் இன்று முதல் எதிர்வரும் 13ஆம் திகதி வரை லண்டனில் நடைபெறவுள்ளது. இதில் 205 நாடுகள் பங்கேற்கின்றன.

இதில், எல்லோரது பார்வையும் உலகின் ஜமைக்காவின் உசைன் போல்ட் மீதே பதிந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. 100 மீற்றர், 200 மீற்றர் ஓட்டங்களில் உலக மற்றும் ஒலிம்பிக் சம்பியனான உசைன் போல்ட், ஏராளமான சாதனைகளை நிகழ்த்தியுள்ளார். உலக தடகளத்தில் 11 தங்கப்பதக்கங்களை அள்ளியிருக்கும் உசைன் போல்ட் இந்தப் போட்டியுடன் ஓய்வு பெறுகிறார்.

"தோற்கடிக்கப்படாமல் விடைபெறுவேன்" என்று சூளுரைத்திருக்கும் அவர் களமிறங்கும் 100 மீற்றர் ஓட்டத்தின் இறுதிச்சுற்று நாளை நடைபெறவுள்ளது.

நீண்ட தூர ஓட்ட வீரரான இங்கிலாந்தின் மோ பரா, 5 ஆயிரம் மற்றும் 10 ஆயிரம் ஓட்டங்களில் ஒலிம்பிக் மற்றும் உலகச் சம்பியனாக வலம் வருகிறார்.

இந்தப் பருவகாலத்துடன் அவரும் ஓய்வுபெறத் திட்டமிட்டுள்ளமையால், 34 வயதான மோ பாராவுக்கும் இதுதான் கடைசி உலகத் தடகளப் போட்டி என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ)

# 'தல'க்குப் பின்தான் 'தளபதி'




விஜயின் 'மெர்சல்' மற்றும் அஜித்தின் 'விவேகம்' படங்கள்தான் தற்போது ரசிகர்களின் எதிர்பார்ப்பு. இந்த இரண்டு படங்களும் வெவ்வேறு கதைக்களங்களில் மிகவும் பிரம்மாண்டமாகத் தயாராகி வருகின்றன.

இந்நிலையில் விஜயின் 'மெர்சல்' பட இசை வெளியீட்டு விழா எதிர்வரும் 20ஆம் திகதி மிகவும் பிரமாண்டமாக நடைபெறவுள்ளது.

இந்நிலையில், அஜித்தின் 'விவேகம்' படப் பாடல்களின் வெளியீடு எதிர்வரும் 7ஆம் திகதி என்று தகவல் வந்துள்ளது. இந்தப் படத்தில் மொத்தம் 7 பாடல்களாம் ஏற்கெனவே சில பாடல்கள் வெளியாகி பட்டையைக் கிளப்பி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஓ)



# பிக்பாஸில் திடீர் திருப்பம்



'பிக்பாஸ்' நிகழ்ச்சியில் அடுத்தடுத்து பல திருப்பங்கள் ஏற்பட்டு வருகின்றன. கடந்த சில நாட்களாக ஓவியாவைப் பற்றிதான் நிகழ்ச்சியில் அதிகமாகக் காட்டினார்கள்.

இந்நிலையில் இன்று புதிதாக வந்த 'புரொமோ'வில் இரு குழுக்களுக்கு கயிறுழுத்தல் போட்டி நடைபெறுகிறது. அதில் தோல்வியுற்ற அணியில் இருப்பவர்களை வெளியேற்றுவதற்குத் தெரிவுசெய்யலாம் என்று 'பிக்பாஸ்' அறிவிக்கிறார்.

இதில் தோல்வியுற்ற அணியில் இடம்பிடித்திருந்தவர்கள் ஷக்தி, காயத்ரி, ஆரவ் மற்றும் ஜூலி. இவர்களில் ஜூலி ஏற்கனவே தெரிவாகிவிட்டதால், எஞ்சிய மூவரில் சக்தி, ஆரவ் ஆகியோரை அதிகமானோர் தெரிவு செய்வதாகக் காட்டப்பட்டுள்ளது. இதனால், அடுத்து யார் தெரிவுசெய்யப் படுவார்கள் என்பது பெரிய குழப்பமாக இருக்கிறது.

அதேவேளை, புதிய 'புரமோவின்'படி கயிறுழுத்தல் போட்டி நடைபெற்ற இடத்தில் ஓவியாவைக் காணவில்லை. அவர் அந்தப் போட்டியில் பங்கேற்கவுமில்லை. (ஓ)

# ஓவியாவை தாக்கிய தாமரை

'பிக் பாஸ்' நிகழ்ச்சியில் நடிகை ஓவியா ஆரவ்வைக் காதலிப்பதாகத் தொடர்ந்து கூறிவருகிறார். ஆரவ் வேண்டாம் எனப் பல முறை கூறியும் தொடர்ந்து வற்புறுத்தி வருகிறார்.

இந்நிலையில் அவரின் இந்தச் செயல் மகா மட்டமானது என பிரபல பாடலாசிரியர் தாமரை தெரிவித்துள்ளார்.

"ஓர் ஆணை இப்படியுமா பாலியல் சீண்டல் செய்வார் ஒரு பெண். அதுவே ஆண் ஒருவர் அங்கே உள்ள ஒரு பெண்ணைத் துரத்தித் துரத்திக் காதலிக்க வற்புறுத்தியிருந்தால் என்ன ஆகியிருக்கும்? ஓவியாவின் செயல்கள் மகாமட்டம்" என அவர் தெரிவித்துள்ளார். (ஓ)








# வருமானம் 40 கோடி டொலர்

ஹம்பாந்தோட்டை துறைமுக ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதை அடுத்து நேரடியாக வெளிநாட்டு முதலீடாக 100 மில்லியன் அமெரிக்க டொலர் நாட்டுக்கு கிடைக்கிறது. அதுமாத்திரமின்றி நாட்டுக்கு மேலும் நேரடி முதலீடாக 300 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கிடைக்கும் என்றும் மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி தெரிவித்தார். 2017 ஆம் ஆண்டின் ஐந்தாவது நிதிக் கொள்கை தொடர்பாக கோட்டை, இலங்கை மத்திய வங்கியன் ஆளுநர் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மகாநாட்டில் உரையாற்றிய அவர், "நாட்டின் பொருளாதாரக் கொள்கை பற்றி சர்வதேச நாணய நிதியமும் பாராட்டுத் தெரிவித்துள்ளது. சுற்றுலாத் துறையில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் காட்டுவதாக உள்ளது. இவ்வருடத்தில் இதுவரை பத்து லட்சத்துக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் இலங்கை வந்துள்ளார். ஹம்பாந்தோட்டை துறைமுக ஒப்பந்தத்தின் மூலம் 40 கோடி அமெரிக்க டொலர் நாட்டுக்கு கிடைக்கவுள்ளது. நாட்டின் மொத்த வெளிநாட்டு ஒதுக்கம் இவ்வாண்டில் 670 கோடி அமெரிக்க டொலர்கள் வரை அதிகரிக்கும்" - என்றார். (உ)

# ஐ.நா. - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்து

ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை வெற்றிகொள்ளும் வேலைத்திட்டத்தில் இலங்கை கைச்சாத்திட்டுள்ளது. கொழும்பு அடிப்படை கற்கை நிறுவகத்தில் இந்த ஒப்பந்தம் நேற்று கைச்சாத்திடப்பட்டது. 2018 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதியில் ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கான நீண்டகால அபிவிருத்தி இலக்குகளை அடிப்படையாகக் கொண்டு இந்த ஒப்பந்தத்தில் இலங்கை கைச்சாத்திட்டுள்ளது. இந்த நிகழ்வில் இலங்கைக்கான ஐக்கிய நாடுகளின் வதிவிடப் பிரதிநிதி ஊனா மெக்விலி உள்ளிட்ட பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர். (உ)

# இன்றைய கருத்தோவியம்



### ரவிக்கு எதிரான பிரேரணைக்கு

# ஐ.தே.கவும் ஒத்துழைக்கும்

ரவி கருணாநாயக்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு மனச்சாட்சிப் படி ஐக்கிய தேசிய கட்சியின் ஒத்துழைப்பும் கிடைக்கும் என்று கூட்டு எதிர்க்கட்சி கூறியுள்ளது. நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில இதனைக் கூறியுள்ளார். ரவி கருணாநாயக்க விசாரணை ஆணைக்குழுவின் முன்னிலையில் ஆர்.கே என்ற நபரைத் தெரியாது என்று கூறியிருந்த போதிலும், அது, அவர்தான் என்று தனக்கு தெரியும் என்றும் உதய கம்மன்பில கூறியுள்ளார். நாடாளுமன்றத்தில் உள்ள 225 உறுப்பினர்களின் பெயர்களில் முதல் எழுத்து ஆர் என்ற எழுத்தும் குடும்பப் பெயராக கே என்ற எழுத்தும் வரக்கூடிய ஒரே உறுப்பினர் ரவி கருணாநாயக்க என்று அவர் கூறியுள்ளார். (உ)

# அக்ஷன்பாம் படுகொலை இன்று 11 ஆவது ஆண்டு



கிழக்கு மாகாணத்தில் பிரெஞ்சு தன்னார்வ தொண்டு நிறுவனமான அக்ஷன் பாம் தொண்டு நிறுவன உள்ளூர் பணியாளர்கள் படுகொலை செய்யப்பட்ட 11ஆவது ஆண்டு நினைவு நிகழ்வு இன்றாகும். 2006ஆம் ஆண்டு ஒகஸ்ட் 4ஆம் திகதி திருகோணமலை மாவட்டம் மூதூர் பிரதேசத்தில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்துக்குமிடையில் போர் உச்சகட்டத்தை எட்டியிருந்த நேரத்தில் இந்தப் படுகொலைச் சம்பவம் நடைபெற்றது. அக்ஷன்பாம் தொண்டு நிறுவனத்தின் உள்ளூர் பணியாளர்களான 4 பெண்கள் உட்பட 17 பேர் தங்களது வீடுகளுக்கு திரும்ப முடியாமல் அலுவலகத்தில் முடங்கியிருந்த போது, இந்தப் படுகொலை நடத்தப்பட்டது. இந்தப் படுகொலை தொடர்பாக முழுமையாக விசாரிக்கப்பட்டு, குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டுமென ஏற்கனவே இலங்கை அரசாங்கத்துக்கு சர்வதேச மட்டத்தில் அழுத்தங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. எனினும் விசாரணைகளில் தாமதமும் அசமந்தப் போக்குமே காணப்பட்டதாக சர்வதேச மனித உரிமை அமைப்புகள் குற்றஞ்சுமத்தியுள்ளன. (உ)

### பல்கலை அனுமதி

# முதற் கட்டப் பணி பூர்த்தி

2016 - 2017 கல்வி ஆண்டுக்கு பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களை பதிவுசெய்ததன் பின்னர் முதற் கட்டமாக நிலவிய வெற்றிடங்களைப் பூர்த்தி செய்யும் பணி நிறைவடைந்துள்ளது. தற்போது இரண்டாம் கட்ட நடவடிக்கைகள் இடம்பெறுவதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் மொஹான் சில்வா தெரிவித்துள்ளார். பாடநெறிகளுக்குத் தெரிவு செய்யப்படும் மாணவர்களின் பெயர் விபரம் உரிய பல்கலைக்கழகங்களுக்கு அடுத்த மாதம் அனுப்பப்படும் என்று ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் மொஹான் சில்வா தெரிவித்துள்ளார். (உ)

# தகவல் அறிதல் சட்டமாகி ஒருவருடம்

தகவல் அறியும் சட்டம் அமுலுக்கு வந்து இன்றுடன் ஒரு வருடகாலம் பூர்த்தியாகிறது. இலங்கையைப் பொறுத்தவரையில் இந்த சட்டம் புரட்சிகரமான மாற்றமாகும் என்று தெரிவித்த பிரதியமைச்சர் கருணாரட்ன பரணவிதான இதன்மூலம் நல்லாட்சி அரசாங்கத்தின் குணாதிசயங்களை சிறப்பாக்க முடிந்துள்ளதாகவும் கூறினார். இந்த சட்டத்தை அமுலாக்குவதன் மூலம் கூடுலான அனுகூலங்கள் கிடைத்துள்ளன என்றும் பிரதியமைச்சர் கருணாரட்ன பரணவித்தான மேலும் தெரிவித்தார். (உ)

# பொலிஸ்க்கு இடமாற்றம்

ஹட்டன் தலைமையகப் பொலிஸ் பரிசோதகர் டி.பி.கே.எம்.ஹெட்டியாரச்சி உடன் அமுலுக்கு வரும் வகையில் இன்று புத்தளம் பொலிஸ் நிலையத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். அவரது இடத்துக்கு அக்கரைப்பற்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏ.எல்.எம்.ஜெமில் இன்று பதவியேற்கவுள்ளதாக பொலிஸ் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். கடந்த எட்டு மாதத்துக்கு முன் முன்னாள் பொலிஸ் பரிசோதகர் திகாவத்துர, ஹட்டனில் சிகை அலங்கார நபர் ஒருவரைத் தாக்கியிருந்தார். அதற்கு எதிர்ப்பு தெரிவித்து பொது மக்கள் போராட்டங்களை முன்னெடுத்திருந்தனர். இந்நிலையில் முன்னாள் தலைமையக பொலிஸ் பரிசோதகர் மாற்றப்பட்டு மேற்படி பொலிஸ் தலைமை பொறுப்பதிகாரி டி.பி.கே.எம்.ஹெட்டியாரச்சி பொறுப்பேற்றிருந்தார். (உ)

# மிதக்கும் மருத்துவமனை கப்பல் கொழும்பு வருகிறது

சீன கடற்படையின் மிக நவீனமான மருத்துவ மனைக் கப்பலான, ஆர்க் பீஸ் நல்லெண்ணப் பயணமாக நாளை மறுதினம் இலங்கைக்கு வர வுள்ளது. இந்தக் கப்பல் எதிர்வரும் 9ஆம் திகதி வரை கொழும்புத் துறைமுகத்தில் தரித்து நிற்கும் என்று சீனத் தூதரகம் அறிவித்துள்ளது. எதிர்வரும் 8ஆம் திகதி, இந்த மிதக்கும் மருத்துவமனையில் இலங்கையர்களுக்கு இலவச மருத்துவ உதவிகள் வழங்கப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆர்க் பீஸ் கப்பல், சீனாவினால் கட்டப்பட்ட மிகப் பெரிய மருத்துவமனைக் கப்பல் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)




## நாளை நாளும் கோளும்

05.08.2017 சனிக்கிழமை ஏவிளம்பி வருடம் ஆடி மாதம் 20ஆம் நாள்

திரயோதசி பி.இ 09.49 வரை | பூராடம் மு.இ. 01.11 வரை | சித்தயோகம் | கரிநாள் | பிரதோசவிரதம்

இராகுகாலம் 09.04-10.34 | சுபநேரம் 03.04-04.34 | எமகண்டம் 01.34-03.04

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| விருத்தி | நலம் | ஒய்வு | சிரமம் | இலாபம் | நட்பு | பக்தி | நன்மை | வெற்றி | களிப்பு | சோர்வு | வீண்செலவு |

எதிரொலி
Ethiroli

# கட்டாக்காலிகளைக் கட்டுப்படுத்துங்கள்!

## விவசாயிகள் கோரிக்கை

கட்டாக்காலிகளைக் கட்டுப்படுத்தி இம்முறை பெரும்போக நெற்செய்கையில்ஈடுபட வழியமைத்து தரவேண்டும் என வேலணைப் பிரதேச விவசாயிகள் கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளனர்.
வேலணைப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று நடைபெற்ற போதே, மேற்படி கோரிக்கையை விவசாயிகள் முன்வைத்தனர்.
“ கடந்த பல வருடங்களாக கட்டாக்காலியாகத் திரியும் கால்நடைகளால் நெற்பயிர்கள் நாசமாக்கப் பட்டதால் நாம் நெற்செய்கையைக் கைவிடு மளவுக்கு நிலைமை சென்றுள்ளது. கடந்த வருடம் சுமார் 50 ஏக்கர் காணியில் சுற்றிவர வேலியமைத்தே நெற்செய்கையில் ஈடுபட்டோம். ஆனால் அவ்வாறு காணியைச் சுற்றி வேலியமைக்கும் வசதி எல்லா விவசாயிகளிடமும் இல்லை. எனவே கட்டாக்காலிகளை உரிய அதிகாரிகள் கட்டுப்படுத்தி, எமது பெரும்போக நெற்செய்கைக்கு வழியேற்படுத்தி தரவேண்டும்” எனக் கோரிக்கை விடுத்தனர்.
எனினும் இது குறித்து தீர்க்கமான முடிவெதனையும் குறித்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இணைத்தலைவர்கள் தெரிவிக்கவில்லை என விவசாயிகள் விசனம் வெளியிட்டுள்ளனர்.(ஆ)

# முல்லையில் குடும்பஸ்தர் தூக்கிட்டுத் தற்கொலை

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் சம்மளங்குளம் பகுதியைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் தூக்கிட்டு தற்கொலை செய்துக் கொண்டுள்ளார்.
இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர்மூன்று பிள்ளைகளின் தந்தையான சிவராசா சிவாகரன் (வயது-38) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.
உயிரிழந்தவர் ஒட்டுசுட்டான் விவசாயத் திணைக்கள அலுவலகத்தில் காவல் கடமை உத்தியோகத்தராக கடமையாற்றிய நிலையால் திடீர் சுகயீனம் காரணமாக ஒரு மாத காலம் கடமைக்கு செல்லவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதனால் மிகவும் வறுமையான நிலையைஎதிர் கொண்டிருந்ததாகவும் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் ஒட்டுசுட்டான் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (உ)

# கிளிநொச்சியில் குருதிக்கொடை

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் இரத்த வங்கிப்பிரிவினர் விடுத்த அவசர வேண்டுகோளை அடுத்து கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தினர் இன்று குருதிக் கொடையில் ஈடுபட்டனர்.
கிளிநொச்சி கமக்கார அமைப்புக்களின் ஏற்பாட்டில் இந்தக் குருதிகொடை இடம்பெற்றுள்ளது. (ஆ)



# அந்த நாள் ஞாபகம்.....!



## 1987.08.04

விடுதலைப் புலிகள் தமது ஆயுதங்களை இந்திய அரசிடம் , யாழ்ப்பாணம், சுதுமலையில் வைத்து ஒப்படைத்தனர். இதன்போதே புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் மக்கள் மத்தியில் முதன் முதலாக உரை நிகழ்த்தினார். இதுவே சுதுமலைப் பிரகடனம் என அழைக்கப்பட்டது.

# டிப்பர் விபத்து



வவுனியா, ஏ-9 வீதி புளியங்குளத்தில் இன்று காலை 9.30 மணியளவில் டிப்பர் வாகனம் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து, மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.
இதன்போது, டிப்பர் வாகனத்தின் சாரதி படுகாயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளைப் புளியங்குளம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ஆ)

# நீரை விரயமாக்காதீர்!

கிளிநொச்சியில் நிலவி வருகின்ற கடும் வறட்சி காரணமாக, பல்வேறு பகுதிகளிலும் பொதுமக்கள் குடிதண்ணீர் பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர்.
இந்நிலையில் குடிதண்ணீர்த் தட்டுப்பாடான பகுதிகளுக்கு குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்படுகின்றபோதும், சில இடங்களில் குடிதண்ணீரானது வீண் விரயம் செய்யப்பட்டுவருவதாகவும் அதனைத் தவிர்க்குமாறும் அனர்த்த முகாமைத்துவ பிரிவு அறிவித்துள்ளது.(உ)

# இன்றுமுதல் விடுமுறை

இரண்டாம் தவணை விடுமுறைக்காக இலங்கையில் உள்ள சகல அரச பாடசாலைகளும் இன்றுமுதல் மூடப்படுகின்றன.
அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகள் இன்று முதல் செப்ரெம்பர் மாதம் 6 ஆம் திகதி வரை இரண்டாம் தவணை விடுமுறைக்காக மூடப்பட்டிருக்கும்.
மீண்டும் பாடசாலைகள் செப்ரெம்பர் மாதம் 6ஆம் திகதி மூன்றாம் தவணைக்காகத் திறக்கப்படவுள்ளன என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (ஆ)

# ரயிலுடன் மோதி தப்பிய மருத்துவர்

## இன்று மதியம் யாழில் சம்பவம்



காங்கேசன்துறையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த ரயில் மீது கார் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. இன்று நண்பகல் 1.40 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் யாழ். போதனாவைத்தியசாலை மருத்துவரான பெண் ஒருவரின் காரே விபத்துக்குள்ளாகியுள்ளது. காரின் பின் பகுதியில் ரயில் மோதியநிலையில், கார் தூக்கி வீசப்பட்டு கடும்சேதமடைந்துள்ளது. எனினும், அதில் பயணித்த மருத்துவருக்கு எதுவித காயமும் ஏற்பட்டிருக்கவில்லை. யாழ்ப்பாணம் இந்துமகளிர் கல்லூரிக்கு அருகாமையிலுள்ள பாதுகாப்பற்ற ரயில் கடவையைக் கடக்க முற்பட்டபோதே இவ் விபத்து நிகழ்ந்துள்ளது. (உ)




## தொடர்ச்சிகள்

### பணியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்தும் அபிவிருத்தித் திட்டங்களிலும், வேலைவாய்ப்புகளிலும் தமிழர்கள் புறக்கணிக்கப்படுகின்றார்கள். தீவுப் பகுதியில் மிக நீண்டகாலமாக வைத்திய சாலைகளில் ஆளணிப் பிரச்சினையும், வசதியீனங்கள் தொடர்கின்றன. ஆனால் அதை உரியவர்கள் தீர்க்க நடவடிக்கை எடுப்பதில்லை. நீங்கள் உங்களுக்குத் தேவையான ஆளணி, வசதிகள் என்பற்றைக் கோரிக்கையாக முன்வையுங்கள்.உங்கள் பிரச்சினைகளை நாங்கள் அரசுக்கு கோரிக்கையாக வைக்கலாமே தவிர, தீர்மானம் எடுக்கும் அதிகாரம் எனக்கில்லை. அப்படியும் கிடைக்காவிட்டால் வைத்திய சாலைகளைப் பூட்டி பணிப்புறக்கணிப்புச் செய்து போராடுங்கள். “ என்றார்.(அ)

### மிரட்டும் ஆவி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கின்றது.
தாஜுதீன் கொலையில் ஷிரந்தி ராஜபக்ஷவின் வாகனம் பயன்படுத்தப்பட்டமை குறித்த விசாரணைகளுக்கு , முகம் கொடுக்காமல் அதை அவர் தவிர்த்து வரும் நிலையிலேயே, தாஜுதீனின் ஆவியைக் கட்டுப்படுத்த ஷிராந்தி பூஜை செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

### மின்னல் வேக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்டுள்ளனர்.விபத்தின் போது அதியுயர் மின்கம்பம், தொலைதொடர்பு கம்பவம் என்பவற்றைஉடைத்துக்கொண்டு பாய்ந்து கிளிநொச்சி வலயக் கல்வித் திணைக்களத்தில் மோதுண்டுள்ளது.
இதன்போது மின்சார சபையின் மின்மாற்றி ஒன்றும் பயன்படுத்த முடியாத அளவுக்கு சேதமுற்றுள்ளது. அதன் பெறுமதி 20 இலட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது. மற்றும் மின் கம்பிகள், கம்பங்கள் என மொத்தமாக 25 இலட்சத்திற்கு மேல் சேதம் ஏற்பட்டுள்ளது என மின்சார சபையின் பொறியியலாளர் ஒருவர் தெரிவித்தார். மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

### பொலிஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸ் அத்தியட்சகர்கள் 5 பேர், பிரதான பொலிஸ் பரிசோதகர்கள் 21 பேர், பொலிஸ் பரிசோதகர்கள் 32 பேர் உள்ளடங்குவதாகப் பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது. (ஆ)

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 04.08.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.